DINAKARAN 3 0 SEP 2015

# சங்கரா பல்கலையில் வேலைவாய்ப்பு முகாம்

காஞ்சிபுரம், செப். 30: காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு மற்றும் இந்திய நிறுவனங்கள் சார்பில் மாநில அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தகவல் தொழில்நுட்ப மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்றன.

பல்கலைக்கழக முதன்மை நிர்வாக அதிகாரி ராமசந்திரன் தலைமை வகித்தார். வேலைவாய்ப்பு பிரிவு மற்றும் பொறியியல்துறை தலைவர் ஸ்ரீராம் முன்னிலை வகித்தார். முகாமில், காஞ்சி சங்கரா பல்கலைக்கழக மாணவர்கள், திருப்பூர், ஈரோடு, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், சென்னை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் பங்கேற்றனர்.

இதில் கணினி மற்றும் பொறியியல் பிரிவுகளில் பயிலும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்டனர். பயிற்சிக்கு பிறகு தகுதியுள்ளவர்களுக்கு பணி வழங்கப்படும் என தேர்வு செய்த நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

DINAMANI

4 OCT 2015

# சங்கரா பல்கலை.யில் வேலைவாய்ப்பு முகாம்

காஞ்சிபுரம், செப். 30: காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான வேலை வாய்ப்பு முகாம் அண்மையில் நடைபெற்றது.

பல்வேறு பன்னாட்டு, இந்திய நிறுவனங்கள் இதில் கலந்து கொண்டன. இந்த முகாமில் காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழக மாணவர்கள், சென்னை, திருப்பூர், ஈரோடு, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இந்த முகாமில் ஒவ்வொரு மாணவர்களும் ஒரே நாளில் 3 நிறுவனங்களில் பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்தது. மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வு உள்ளிட்ட பல்வேறு கட்டங்களாக நிறுவனங்கள் மாணவர்களைத் தேர்வு செய்தன. இதற்கான ஏற்பாடுகளை சங்கரா பல்கலைக்கழக வேலைவாய்ப்பு பிரிவு, பொறியியல் துறைத் தலைவர் ஸ்ரீராம், முதன்மை நிர்வாக அதிகாரி ராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.